தினமணி

**முட்டை விலை 5 காசுகள் உயர்ந்தது**

First Published : 07 Feb 2012 12:00:00 AM IST

நாமக்கல்,பிப்.6: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை திங்கள்கிழமை 5 காசுகள் உயர்த்தப்பட்டு
ரூ.2.43 ஆக நிர்ணயிக்கப்பட்டது.
நாமக்கல்லில் திங்கள்கிழமை நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இம் முடிவெடுக்கப்பட்டது.
சில நாள்களாகத் தொடர்ந்து சரிவைச் சந்தித்த முட்டை விலை, இப்போது உயரத் தொடங்கியுள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
வட மாநிலங்களில் முட்டை நுகர்வு அதிகரித்து உள்ளதால் பிற மண்டலங்களிலும் முட்டை விலை சற்று உயர்ந்து உள்ளது. இதுவே நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்த்தப்பட்டதற்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.
பிறமண்டலங்களில் முட்டை விலை வருமாறு: ஹைதராபாத் ரூ.2.25, விஜயவாடா, தனுகு ரூ.2.25, பார்வாலா ரூ.2.36, சென்னை ரூ.2.45, மைசூர் ரூ.2.35, பெங்களூர் ரூ.2.40, மும்பை ரூ.2.55, டெல்லி ரூ.2.53, கொல்கத்தா ரூ.2.55.
கறிக்கோழி விலை: கறிக்கோழி கிலோ ரூ.48-க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.29-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

**வடகாட்டில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கக் கோரிக்கை**

First Published : 06 Feb 2012 02:01:49 PM IST

ஆலங்குடி, பிப். 5: ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடகாடு மற்றும் அதைச் சுற்றியுள்ள மாங்காடு, கீழாத்தூர், புள்ளான்விடுதி, கொத்தமங்கலம், அணவயல் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் அதிகமான எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து, அதன்மூலம் விவசாயிகள் நெல் சாகுபடி மேற்கொண்டுள்ளனர். மேலும்,

குளம், அக்கினி ஆறு, அம்புலி ஆறு உள்ளிட்ட ஆற்று நீரைக் கொண்டும் நெல் அதிமாக சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப் பகுதியில் விளையும் நெல்லை அரைத்து அரிசியாக்க வடகாட்டில் சுமார் 7 அரைவை ஆலைகள் உள்ளன. இந்நிலையில் இங்கு விளையும் நெல்லை உள்ளூர் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டியுள்ளது.

விவசாயத்தில் விதை, இடுபொருள்களின் விலை, தொழிலாளர்களின் ஊதியம் உயர்ந்துள்ள நிலையிலும், ஆள்பற்றாக்குறை போன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்டு நெல் சாகுபடி செய்தாலும், உள்ளூர் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதால் லாபம் குறைகிறது.

ஆகையால், வடகாட்டில் தமிழநாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே, இந்தப் பருவத்திலேயே நேரடி நெல்கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**திருந்திய நெல் சாகுபடித் திடல்களில் கூடுதல் இயக்குநர் ஆய்வு**

First Published : 06 Feb 2012 02:11:50 PM IS

கடையநல்லூர்,பிப்.5:÷கடையநல்லூர் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருந்திய நெல் சாகுபடி திடல்களை சென்னை வேளாண்மை கூடுதல் இயக்குநர் சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

÷கடையநல்லூர் வட்டாரத்தில் நடப்பு பிசானப் பருவத்தில் 3200 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

÷இதில் சுமார் 1700 ஹெக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

÷மேலும் கடையநல்லூர்,நயினாரகரம்,காசிதர்மம்,கம்பனேரி,கிருஷ்ணாபுரம் ஆகிய பகுதிகளில் செயல் விளக்க தொகுப்புத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

÷இவற்றை சென்னை வேளாண்மை கூடுதல் இயக்குநர் சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.÷மேலும், அவர் விவசாயிகளை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் குமார்,வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம்,உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் அழகிரிசாமி,கடையநல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெருமாள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

÷கொடிக்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் முத்தையா,நயினாரகரம் ஊராட்சி மன்றத் தலைவர் டெய்சிராணிவள்ளிக்குமார்,முன்னோடி விவசாயிகள் திருப்பதிராஜா,திருமலைக்குமார்,துணை

வேளாண்மை அலுவலர் லட்சுமிநாராயணன்,உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமநாராயணன், மாரியப்பன், செல்வராஜ்,முருகேசன்,முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**முட்டைக் கோழி விலை வீழ்ச்சி**

பிப்ரவரி 07,2012,00:29



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில், 800 கோழிப்பண்ணைகள் அமைந்துள்ளன. அதன் மூலம் நாள்தோறும், மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், சத்துணவு திட்டம், கேரள மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

கோழிப்பண்ணைகளில், முட்டை உற்பத்திக்காக, 16 முதல், 18 வார வயதுடைய கோழிகள் விடப்படுகின்றன. அந்தக் கோழிகள் தொடர்ந்து ஒன்றரை ஆண்டு வரை முட்டைகளை உற்பத்தி செய்கின்றன. ஒரு கோழி சராசரியாக, 320 முட்டைகள் இடுகிறது. ஒன்றரை ஆண்டுக்கு பின், கோழிகள் இடும் முட்டைகளின் எண்ணிக்கை குறைகிறது.

எனவே, அவை இறைச்சிக்கு அனுப்பப்படுகின்றன. குறிப்பாக, முட்டைக் கோழிகள், கேரளாவுக்கு அதிக அளவில் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. முட்டைக் கோழி இறைச்சி அடர்த்தியாக இருப்பதால், பிரியாணி உணவில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. அதனால், இந்த இறைச்சியின் விலை உச்சத்தில் இருக்கும்.

இந்நிலையில், கடந்த ஜனவரி 18ம் தேதி முதல், முட்டைக் கோழி இறைச்சி விலை, சரிவடைந்து வருகிறது. 46 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ முட்டைக் கோழி, பிப்ரவரி 2ம் தேதி

நிலவரப்படி, 29 ரூபாயாக சரிவடைந்துள்ளது. இதுவரை இல்லாத அளவில் ஏற்பட்டுள்ள இந்த சரிவு, கோழிப் பண்ணைத் துறையினரிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தலைவர் (நாமக்கல் மண்டலம்) செல்வராஜ் கூறுகையில், ""முட்டை யின் விலை குறைந்து வருகிறது. அதனால், பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் அதிக அளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் காரணமாக முட்டைக் கோழியின் விலை சரிந்து வருகிறது," என்றார்.

**குளிர்ச்சி தரும் அத்திப்பழம் விற்பனை சூடுபிடித்தது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,02:34 IST

சென்னை : வெயில் காலத்தில், உடலுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடிய அத்திப்பழ விற்பனை சென்னையில், சூடு பிடித்துள்ளது.
வெயில் பருவத்தை சமன் செய்ய ஏற்றவகையில் தர்பூசணி வரத்து அதிகரித்துள்ளது. இந்த வரிசையில் அத்திப்பழ விற்பனையும் சூடு பிடித்துள்ளது.
பூக்கடை கோவிந்தப்ப தெரு சந்திப்பில் உள்ள கடைகளில் பழ விற்பனை அமோகமாக இருக்கும். பருவத்துக்கு ஏற்ற பழங்கள் இங்கு விற்பனைக்கு வரும். தற்போது குளிர்ச்சியையும் பல்வேறு சத்துக்களையும் அதிகப்படியாக தரவல்ல அத்திப்பழ விற்பனை தொடங்கியுள்ளது.
தற்போது நான்கு அத்திப்பழங்கள் இருபது ரூபாயக்கும், ஒரு பெட்டியின், விலை 100 ரூபாய் முதல் 120 வரையிலும் விற்கப்படுகிறது.
அத்திப்பழம்...

டூ ஜீரணத்தையும், சுறுசுறுப்பையும் தரும்

டூ உடலுக்கு குளிர்ச்சி ஊட்டும்

டூ வாய்த் துர்நாற்றத்தையும் போக்கும்

டூ தலைமுடியை வளரச் செய்யும்

டூ ரத்தத்தை சுத்திகரிக்கும்

டூ போதையால் கல்லீரல் வீக்கம் அடைந்தவர்
களுக்கு நல்ல மருந்து

இதில், புரோட்டின், சர்க்கரை, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்பு சத்துக்கள் மற்ற பழங்களை விட, நான்கு மடங்கு அதிகமுள்ளது.

**அறுவடைக்கு தயாராக உள்ள கோமுகி அணை பாசன பயிர்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2012,23:42 IST

கருத்தை பதிவு செய்ய

கள்ளக்குறிச்சி : கச்சிராயபாளையத்தில் கோமுகி அணைப் பாசனத்தில் செழிப்பாக விளைந்து நெற்பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது.

கச்சிராயப்பாளையம் பகுதியில் அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்கள் செழிப்பாக உள்ளதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்
ளனர்.

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, கச்சிராயப்பாளையம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் நெற் பயிர் சாகுபடி செய்துள்ளனர். இப்பகுதியில் பயிரிடும் விவசாயிகள் பெரும்பாலா@னார் கோமுகி அணை பாசன நீரை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கோமுகி அணையிலிருந்து பாசன வாய்க்கால் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீரை பயன்படுத்தி கள் ளக்குறிச்சி, கச்சிராயப்பாளையம் சுற்று வட்டார பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நெற் பயிர் சாகுபடி செய்திருந்தனர்.

தற்போது நெற் பயிர்கள் அனைத்தும் செழிப்பாக வளர்ந்துள்ளதால் விவ சாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள நெற் பயிர்களை அறுவடை செய்வதற்கு ஆட்கள் கிடைக்காதாதல் நெல் அறுடை இயந்திரம் மூலம் அறுவடை செய்து வருகின்றனர்.

**பூக்கள் விலை தொடந்து ஏறுமுகம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,02:15 IST

கருத்தை பதிவு செய்ய

சேலம்: தைப்பூசம் மற்றும் பவுர்ணமியை முன்னிட்டு, சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டில் அனைத்து பூக்கள் விலையும் உச்சத்தில் இருந்தது.

சேலம் மாவட்டத்தில் பூலாவரி, வீரபாண்டி, நெய்க்காரப்பட்டி, மகுடஞ்சாவடி, அரியானூர், பனமரத்துப்பட்டி, வீராணம், செட்டிசாவடி, தர்மபுரி மாவட்டம் தொப்பூர், பொம்மிடி, கடத்தூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் சாமந்தி பூக்கள் விளைச்சல் அதிகரித்துள்ளது. சேலம் பூ மார்க்கெட்டில் பொங்கலுக்கு முன்பு வரை சாமந்தி உட்பட பல்வேறு பூக்களின் விலை குறைவாகவே இருந்தது. பொங்கலுக்கு பின், பூக்களின் விலையில் ஏற்றம் காணப்பட்டது.

தொடர்ந்து முகூர்த்த நாட்கள் வந்ததால், பூக்களின் விலை ஏறுமுகமாகவே இருக்கிறது.
சேலம் பூ மார்க்கெட் என்.எஸ்.கே., பூ கமிஷன் மண்டியை சேர்ந்த சந்தான கிருஷ்ணன் கூறியதாவது:

சேலம் மாவட்டத்தை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் இருந்து மார்க்கெட்டுக்கு தினமும் பூக்கள் வரத்தாகின்றன. கடந்த டிசம்பர் மாதம் சாமந்தி பூக்கள் வரத்து அபரிமிதமாக இருந்தது. இதனால், ஒரு கிலோ, 10 ரூபாய்க்கு விற்பனையானது. தினமும் சேலம் மார்க்கெட்டுக்கு, 20 டன் சாமந்தி பூக்கள் வரத்தாகின்றன. இங்கிருந்து சென்னை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், புதுச்சேரி மாநிலத்துக்கும் சாமந்தி பூக்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. பொங்கல் முதல் பூக்களின் விலையில் உயர்வு ஏற்பட்டது. பொங்கலன்று ஒரு கிலோ வெள்ளை சாமந்தி பூ, 160 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, ஒரு கிலோ சாமந்தி பூ விலை, 100 ரூபாயாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பூ வியாபாரிகள் கூறியதாவது:

தைப்பொங்கலை முன்னிட்டு முகூர்த்த தினம் தொடர்ந்து வந்ததால், அனைத்து பூக்களுக்கும் நல்ல விலை கிடைத்து வருகிறது. நாளை (இன்று) தைப்பூசம் மற்றும் பவுர்ணமியை முன்னிட்டு பூக்கள் வாங்க பூ மார்க்கெட்டில் காலையில் இருந்தே வியாபாரிகளும், பொதுமக்களும் குவிந்துள்ளனர். ஒரு கிலோ சம்பங்கி பூ, 80 ரூபாய், பொம்மிடியில் இருந்து வந்துள்ள பட்டன் ரோஸ், 200 ரூபாய், பல வண்ணங்களில் வந்துள்ள ஒசூர் ரோஜா பூக்கள், 120 ரூபாய், குண்டுமல்லி, 250 ரூபாய், ஜாதிமல்லி, 240 ரூபாய், கனகாம்பரம் 350 ரூபாய், அரளி 160 ரூபாய்க்கு விற்பனையானது. பூ மாலைகளின் விற்பனையும் அதிகம் காணப்படுகிறது. 60 முதல் 200 ரூபாய் வரை மாலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. பொங்கலுக்கு பின், பூக்களுக்கு தொடர்ந்து விலை கிடைத்து வருவது விவசாயிகள் மட்டுமின்றி, வியாபாரிகளுக்கும் மகிழ்ச்சியாக உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 243 காசாக நிர்ணயம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,01:56 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 243 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை ஐந்து காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 238 காசுகளுக்கு

விற்பனை செய்யப்பட்ட முட்டை ஐந்து காசுகள் உயர்த்தி, 243 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை மீண்டும் ஏற்றம் காணத் துவங்கியிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்:

சென்னை, 245 காசுகள், பெங்களூரு, 240 காசுகள், மைசூரு, 235 காசுகள், ஹைதராபாத், 225 காசுகள், மும்பை, 255 காசுகள், விஜயவாடா, 225 காசுகள், கோல்கத்தா, 255 காசுகள், பார்வாலா, 236 காசுகள், டில்லி, 253 காசுகள்.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 29 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 43 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை, மீன்வள சிறப்பு கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,04:28 IST

தர்மபுரி : தர்மபுரியை அடுத்த குண்டல்பட்டி கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தொழில் முனைவோருக்கு கால்நடை மற்றும் மீன் வளம் சார்ந்த சிறப்பு கருத்தரங்கு நடந்தது.

பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் பேராசிரியர் முருகன் வரவேற்றார். வேளாண் மண்டல இணை இயக்குனர் மனோகரன் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் ஞானஉபகாரம் கால்நடை சார்ந்த கையேட் டை வெளியிட்டார். கால்நடை பாராமிரப்பு துறை துணை இயக்குனர் ராஜேந்திரன், கால்நடை துறை திட்டங்கள் குறித்தும், வேளாண் துணை இயக்குனர் மேகநாதன், வேளாண் துறை திட்டங்கள் குறித்தும், மீன் வளத்துறை உதவிய இயக்குனர் ஜெயக்குமார், மீன் வளத்துறை திட்டங்கள் குறித்தும் பேசினர். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் கணேசன், பேராசிரியர் இசக்கியேல் நெப்போலியன், கால்நடை மருத்துவர் இளங்கோவன், உதவி பேராசிரியர் மீனலோச்சனி உட்பட பலர் கலந்து கொண்டனர். பாலக்கோடு, கோணங்கிநாயக்கனஅள்ளி, சின்னாறு உள்ளிட்ட பகுதியில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி பேராசிரியர் சிதம்பரம் நன்றி கூறினார்.

**விலை உயர்வை எதிர்பார்த்து மஞ்சள் அறுவடை தாமதம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,01:45 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைவதால், நிலத்தில் விளைந்த மஞ்சளை அறுவடை செய்யாமல், விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

சென்ற ஆண்டு ஃபிப்ரவரி மாதத்தில் இருந்து மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என விவசாயிகளும் பல்வேறு போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். எனினும், மத்திய, மாநில அரசுகள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காக்கின்றன.

அதையடுத்து, விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட மஞ்சளை குடோன்களிலும், வீடுகளிலும் இருப்பு வைத்து வருகின்றனர். சிலர், மஞ்சளை அறுவடை செய்யாமல், விலை உயர்வுக்காக காத்திருக்கின்றனர். ஈரோடு சந்தைகளுக்கும் மஞ்சள் வரத்து கணிசமாக குறைந்துள்ளது.

தொடர் விலை வீழ்ச்சியால், விவசாயிகள் விற்பனை செய்ய முன்வரவில்லை. விலை உயர்ந்தால் மட்டுமே, மஞ்சள் அறுவடை செய்வோம் என பலரும் தெரிவிக்கின்றனர்.

அவல்பூந்துறை மஞ்சள் விவசாயி முருகன் கூறியதாவது:

வெள்ளோடு, அவல்பூந்துறை, சிவகிரி, அறச்சலூர், மொடக்குறிச்சி, கவுண்டச்சிபாளையம் உள்ளிட்ட பகுதியில் அதிக பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. சென்ற 2010ல் திடீர் விலை உயர்வால், வாழை, கரும்பை தவிர்த்து மஞ்சள் சாகுபடிக்கு மாறினோம்.

ஆனால், 2011ல் இருந்து மஞ்சள் விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. அதிக முதலீடு செய்து மஞ்சள் சாகுபடி செய்தவர்களுக்கு, பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது. நடப்பாண்டும் மஞ்சள் விளைச்சல் அமோகமாக இருப்பதால், மேலும் விலை சரிய வாய்ப்புள்ளது.

தவிர, பராமரிப்பு, அறுவடை, மஞ்சள் வேகவைத்தல், போக்குவரத்து என செலவு தாறுமாறாக உள்ளது. தற்போதைய விலை நிலவரப்படி, போட்ட பணத்தை கூட எடுக்க முடியாமல் உள்ளது.

எனவே, தங்களை நஷ்டத்தில் இருந்து காத்துக்கொள்ள, மஞ்சள் அறுவடை செய்யாமல் நிலங்களிலேயே விட்டு விட்டோம். எப்போது, விலை ஏறுமே அப்போதுதான் அறுவடை பணிகள் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**நெல் கொள்முதல் மையம் துவக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,02:49 IST

மதுரை :""உசிலம்பட்டி அருகே முண்டுவேலம்பட்டியில், அரசு நேரடி நெல் கொள்முதல் மையம் துவக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் வலியுறுத்தியது.
சங்கத் தலைவர் மாயத்தேவன், மாவட்ட கலெக்டர், வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளருக்கு அனுப்பிய மனு:
திருமங்கலம் பிரதான கால்வாய் பாசனக்கோட்டம் 4 (எம்.டி.யு.31) முண்டுவேலம்பட்டியை தலைமையிடமாகக் கொண்டது. இக்கோட்டத்தில் நத்தபட்டி, கரிசல்பட்டி, அழகுசிறை, காண்டையில் 3000 ஏக்கரில் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக, நெல் கொள்முதல் மையம் செயல்பட்டது. எடை மற்றும் தூசி, உமி தூற்றும் இயந்திரங்கள், உலர்களம், அலுவலகம் உள்ளன. விவசாயிகள் நலன் கருதி, அரசு நெல் கொள்முதல் மையம் உடனடியாக துவக்க வேண்டும். அரசியல் தலையீடு இன்றி, விவசாய குழு மூலம் அதை செயல்படுத்த உள்ளோம், என குறிப்பிட்டார்.

**நெல் பழ நோய் கட்டுப்படுத்தும் முறைகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2012,01:16 IST

தென்காசி :நெல் பழ நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை பற்றி தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:""சிறிய அளவிலேயே முன்பு காணப்பட்ட நெல் பழ நோய் கடந்த சில ஆண்டுகளில் நெற் பயிரில் பரவலான அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மிகப்பெரும் மகசூல் பாதிப்பை ஏற்படுத்தும் இந்நோய் இரு வகைகளில் நெற்பயிருக்கு பாதிப்பை உண்டாக்குகிறது. முதலாவதாக பூக்கும் பருவத்தில் பூக்களில் உள்ள சூல்களை அழித்து விடுகிறது. பாதிக்கப்பட்ட பூக்களின் பிற பகுதிகள் நன்றாக இருப்பினும் பூக்கள் பளபள பச்சை நிற பழங்களாக மாறி விடுகிறது.
இரண்டாவதாக முதிர்ச்சியடையும் தருவாயிலிருக்கும் கதிர் மணிகளையும் தாக்கி கருமை நிற பழங்களாக்கி விடுகிறது. முதலில் சிறிய அளவிலிருக்கும் இப்பழங்கள் வளர்ந்து பெரியதாகி ஒரு செ.மீ. அளவிற்கு வளர்ந்து அடர் பச்சை நிறமாகவோ அல்லது கருமை நிறமாகவோ மாறி விடும். இறுதியில் வெடித்து சிதறி ஆரஞ்சு நிற பூஞ்சாண வித்துகள் வெளிப்படும். பொதுவாக ஒரு கதிர்

கொத்தில் சில கதிர்கள் மட்டுமே பாதிக்கப்படும். நோய் தீவிரமாகும் போது பாதிக்கப்படும் கதிர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்நோய் பாதிப்பால் தானியம் மற்றும் விதை தரம் குறைகிறது.

நோய்க்கு உகந்த சூழ்நிலைகள்
பூ பூக்கும் பருவத்தில் 20 டிகிரி செல்சியசிற்கு குறைவான வெப்பநிலை, ஒப்பு ஈரப்பதம் 92க்கு மேல் இருப்பது, வானம் மேக மூட்டத்துடன் இருப்பது, விட்டு விட்டு தூரல் இருப்பது, நல்ல நீர் செழிப்பான பருவங்களில் அதாவது அதிக வளர்ச்சிக்கு உகந்த பருவங்களில் இந்நோய் பரவலாக தாக்குகிறது. அதிக அளவில் தழைச்சத்தை இடப்பட்ட வயல்களில் இந்நோய் எளிதில் தோன்றும். ஆடுதுறை 39, சி.ஆர்.1009, கர்நாடக பொன்னி போன்ற ரகங்கள் இந்நோயால் அதிகம் பாதிப்புறும்.

கட்டுப்பாட்டு முறைகள்
சான்று பெற்ற விதைகளையே விவசாயிகள் வாங்கி பயன்படுத்த வேண்டும். பருவத்தில் பயிர் செய்யப்படும் பயிர்களில் இந்நோய் தாக்குதல் குறைவு. வரப்புகளை களைகளின்றி சுத்தமாக வைக்க வேண்டும். தழைச்சத்தை வேளாண்மை துறையின் பரிந்துரைப்படி இட வேண்டும். கதிர் காம்பு வெளிவரும் நேரத்தில் மற்றும் 50 சதம் பூத்த நிலையில் குளோரோதலோனில் 2 கிராம், கார்பண்டாசியம் 1 கிராம், மாங்கோசெப் 2 கிராம், காப்பர் ஆக்கி குளோரைடு 2.5 கிராம், புரொபிகோனசோல் 1 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் 200 லிட்டர் தண்ணீர் உபயோகித்து தெளித்து இந்நோயை கட்டுப்படுத்தலாம்.
அறுவடையின் போது பாதிக்கப்பட்ட செடிகளை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும்" என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**பூ பூக்கும் சமயத்தில் தலவு இலை : மா விவசாயிகள் பாதிக்கும் அபாயம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2012,22:03 IST

கருத்தை பதிவு செய்ய
பெரியகுளம் :பெரியகுளம் பகுதியில் மாமரத்தில் பூபூக்கும் சமயத்தில் தலவு இலைகள் வந்ததால் மகசூல் பாதிக்கும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான சோத்துப்பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை, செழும்பு, தொண்டைகத்தி, புலிக்கூடு, கோயில்காடு, முருகமலை, வறட்டாறு, கருங்கல் உட்பட பல பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகின்றன.

மா மரங்களில் தை மாதங்களில் பூ பூக்க துவங்கும். மாசி மற்றும் பங்குனி மாதத்தில் அடுத்த நிலையான பாசியாக மாறும். அதனை தொடர்ந்து 15 நாட்களில் மா பிஞ்சுகள் வரும். பிஞ்சுகள் 60 முதல் 70 நாட்களில் மாங்காயாக தயாராகும்.

பெரியகுளம் தோட்டக்கால் மண்ணிற்கு மல்கோவா, பங்கனபள்ளி, சப்போட்டா, காசாகாய், நாட்டுக்காய் உட்பட பலவகையான காய்கள் அறுவடை செய்யப்படுகின்றன.

இந்தாண்டு மா மரங்களில் பூக்களுக்கு பதிலாக அதிகளவில் "தலவு' எனப்படும் இலை வந்துள்ளது. இதனால் இலை உள்ள இடத்தில் பூக்கள் மீண்டும் பூக்காது. 50 மரங்களில் 25 மரங்களில் தலவு அதிகளவில் உள்ளதால் மா விளைச்சல் பாதிக்கும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**பசுமை வீடு திட்டத்தில் கட்சியினர் வசூல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2012,21:51 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்சுழி :திருச்சுழியில் பசுமை வீடு திட்டம் மற்றும் இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டத்தில் கட்சியினர் வசூல் வேட்டை நடப்பதாக ö பாதுமக்கள் புகார் கூறினர்.

திருச்சுழி ஒன்றியத்தில் அனைத்து ஊராட்சிகளில் பசுமை வீடு திட்டத்தின் கீழ், ஒரு வீடு 1.80 லட்சம் ரூபாயில், 119 வீடுகள் கட்டப்பட உள்ளன. இதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ், 167 வீடுகள் ஒதுக்கப்பட்டு, அதற்கான பயனாளிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் பயனாளிகளை தேர்வு செய்து, அவர்களுக்கு உத்தரவு வழங்கும் போது, 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை கட்சியினர் வசூல் வேட்டை நடத்துவதாக, பாதிக்கப்பட்ட பயளானிகள் புகார் கூறினர்.

பணம் கொடுத்ததை யாரிடமாவது கூறினால், வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து விடுவோம் என, கட்சியினர் மிரட்டுவதாக புலம்புகின்றனர். மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து, பயனாளிகளிடம் எந்தவித பணம் பெறாமல், உத்தரவை வழங்க வேண்டும் என,பயனாளிக ள் எதிர்பார்க்கின்றனர்.

திருச்சுழி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கூறியதாவது: நாங்கள் முறையாக, தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்து, உத்தரவு வழங்கி வருகிறோம். மற்றவை பற்றி ஒன்றும் தெரியாது,என்றார்.

---

## பூத்து குலுங்கும் ‘மா’ மரங்கள் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி

வேப்பனஹள்ளி: வேப்பனஹள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் மா மரங்கள் பூத்து குலுங்குகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி, நரணிகுப்பம், கொத்த கிருஷ்ணப்பள்ளி, மாரசந்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மார்கழி, தை மாதங்களில் மா மரங்களில் பூ பிடிக்கும் பருவம் என்பதால், தற்போது பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இதனால் இந்த ஆண்டு மா விளைச்சல் அமோகமாக இருக்கும் என விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறுகையில், ``வழக்கமாக பனிக்காலத்தில் மா மரங்களில் பூக்கள் பிடிக்கும். தை மாதத்துக்கு பிறகு பனி குறைந்து வெயில் சுட்டெரிக்கும். ஆனால், இந்த ஆண்டு தற்போது வரை பனிப்பொழிவு இருக்கிறது. சீசன் நன்றாக இருப்பதால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மா மரங் களில் பூக்கள் அதிகம் பிடித்துள்ளன. மேலும், பனி தொடர்வதால் பூக்கள் அதிகம் உதிராமல் உள்ளது. எனவே, அனைத்து பூக்களும் பிஞ்சாகும் என எதிர்பார்த்துள்ளோம். இதனால் இந்த ஆண்டு மா விளைச்சல் எதிர்பார்த்ததை விட அதிகம் இருக்கும்`` என்றனர்.

## நுண்ணுயிர் உரம் தயாரிப்பு பயிற்சி

***<u>கருத்துகள்</u>***

திருச்சி, : திருச்சி ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விவசாயிகளுக்கான நுண்ணுயிர் தயாரிப்பு இலவச பயிற்சிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி துணை முதல்வர் பிச்சைமணி தலைமை வகித்தார். நுண்ணுயிரியல் துறை தலைவர் பேராசிரியர் சாந்தி கந்தசாமி, பேராசிரியர்கள் ராஜபாண்டியன் ஆகியோர் உரம் தயாரிப்பது

குறித்து பயிற்சி அளித்தனர். நெல், கரும்பு, வாழை, மலர், எண்ணெய் வித்துக்கள், காய்கனி சாகுபடியில் பழமை மாறாத வகையில் நவீன விவசாய முறையுடன் நுண்ணுயிர் உரத்தயாரிப்பு குறித்து செயல் முறை விளக்கத்துடன் பயிற்சியளிக்கப்பட்டது. ஏராளமான விவசாயிகள் இதில் கலந்துகொண்டனர்.

## பருவகாலத்திற்கு ஏற்ற பயிர்களை பயிரிட வேண்டும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

***<u>கருத்துகள்</u>***

தஞ்சை, : பருவகாலத்திற்கு ஏற்ற பயிர்களை விவசாயிகள் பயிர் செய்ய வேண்டும் என்று டிஆர்ஓ சுரேஷ்குமார் அறிவுறுத்தினார்.

தஞ்சை மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தஞ்சை மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், தேசிய வேளாண் மற்றும் கிராம வளர்ச்சி வங்கி இணைந்து நடத்திய முக்கிய வேளாண் பயிர்களில் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான திட்டத்தில் விவசாயிகள் பங்கேற்கும் விழா நடைபெற்றது. டிஆர்ஓ சுரேஷ்குமார் தலைமை வகித்து பேசியதாவது:

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் விவசாயிகள் அளிக்கும் கோரிக்கைகளை ஏற்று இந்த செயல்முஹை விளக்கக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தாங்கள் மேற்கொள்ளும் கடின உழைப்பின் முழுமையான பலனை பெற பருவகாலத்திற்கு ஏற்ற பயிர்களை பயிர் செய்ய வேண்டும். மேலும், காவிரி பாசன பகுதியில் நெல் அறுவடைக்குப் பின் நெல் தரிசில் உளுந்து சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் இயந்திரம் மூலம் விதையிடல், தரமான விதை மற்றும் ரகம், ஒருமித்த விதை நேர்த்தி, தெளிப்பு நீர் பாசனம் ஆகியவற்றின் தொழில்நுட்பங்கள் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் அளிக்கப்படும் செயல்விளக்கத்தின் மூலம் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிக்க வேண்டும் என்றார்.

நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் ரவிக்குமார் திட்ட விளக்கவுரையாற்றியபோது, தமிழ்நாடு வேளா ண்மை பல்கலைக்கழகம் நபார்டு நிதியுதவியுடன் முக்கிய பயிர்களில் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான திட்டத்தின்கீழ் திருவையாறு வட்டாரத்திலுள்ள மகாராஜாபுரம், புனவாசல், விளாங்குடி மற்றும் திருபழனம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பங்களையுமஂ அதற்குத் தேவையான முக்கிய இடுபொருள்களையும் வழங்கி வருகிறது.

இதனை பயன்படுத்தி விவசாயிகள் தங்களது உற்பத்தி திறனையும், நிகர லாபத்தையும் அதிகரிக்க வேண்டும் என்றார்.

விழாவில், டிஆர்ஓ திட்ட பயனாளிகளுக்கு முக்கிய இடுபொருட்களை வழங்கி மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கப்பட்ட முன்மாதிரி செயல்விளக்க திடல்களை பார்வையிட்டார். மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் சந்திரசேகரன் வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குநர் ராமதாஸ் சிறப்புரையாற்றினார். நவீன பயறு வகை சாகுபடி தொழில்நுட்பங்கள், இயந்திரமமாக்குதல், பயிறு வகைகளில் புதிய ரகங்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் தொழில்நுட்ப உரையாற்றினர்.

## தரமற்ற விதை விற்றால் சட்டப்படி நடவடிக்கை வேளாண் அதிகாரி எச்சரிக்கை

***கருத்துகள்***

திருச்சி, : திருச்சி விதை பரிசோதனை அலுவலர் எழில்அரசு தெரிவித்திருப்பதாவது:
வேளாண்மை துறை மூலமாக உற்பத்தி செய்யப்படும் அனைத்து விதைகளுக்கும் பரிசோதனை முடிவு களின் அடிப்படையில் சான்று செய்யப்படுகிறது. தனியார் மற்றும் அரசு விதை விற்பனை நிலையங்களில் தரமான விதைகள் விற்பனை செய்யப்படு வதை கண்காணிப்பதற்கு பரிசோதனை முடிவுகள் பயன்படுகிறது.
வேளாண்மை துறை பண் ணையில் உற்பத்தியாகும் விதைகளுக்கு இதே பரிசோ தனை அடிப்படையில் கிரயத் தொகை, மானியத்தொகை வழங்கப்படுகிறது. விதை விற்பனை நிலையங்களில் விநியோகிக்கப்படும் தரமற்ற விதைக்கு வேளாண் துறை நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகிறது. விதை உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்ய விதை பரிசோதனை நிலையம் உள்ளது.

பரிசோதிக்கப்பட்ட விதை மூலம் அதிக மகசூல் பெற்று நல்ல வருவாய் பெறலாம். எனவே விதை பரிசோதனை நிலையத்தை பயன்படுத்தி கொள்ள விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் முன் வரவேண்டும். இவ்வாறு எழில் அரசு கூறினார்.

---

**நடப்பு நிதி ஆண்டில் கயிறு பொருள்கள் ஏற்றுமதி ரூ.1,000 கோடியாக உயரும்**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவின் கயிறு பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 24 சதவீதம் அதிகரித்து ரூ.1,000 கோடியாக உயரும் என கயிறு பொருள்கள் அமைச்சர் (கேரள மாநிலம்) அதூர் பிரகாஷ் தெரிவித்துள்ளார். ரஷ்யா, லத்தீன் அமெரிக்கா போன்ற புதிய சந்தைகளில் தேவைப்பாடு அதிகரித்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

கடந்த நிதி ஆண்டில் கயிறு பொருள்கள் ஏற்றுமதி ரூ.800 கோடியாக இருந்தது. இதனை ஐந்து ஆண்டுகளுக்குள் இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.1,600 கோடியாக உயர்த்த குறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான அமைச்சகம் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கயிறு பொருள்கள் ஏற்றுமதி வியக்கத்தக்க வகையில் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மந்தநிலை ஒரு சவாலாக உள்ளது. ஏனென்றால், நாட்டின் கயிறு பொருள்கள் ஏற்றுமதியில் மேற்கண்ட நாடுகளின் பங்களிப்பு 72 சதவீதமாக உள்ளது.

இந்த சவால்களை எதிர்கொண்டு ரஷ்யா, லத்தீன் அமெரிக்கா போன்ற புதிய சந்தைகளை இலக்காகக் கொண்டு இந்திய கயிறு தயாரிப்பு நிறுவனங்கள் செயல்பட தொடங்கி உள்ளன.

கயிறு பொருள்கள் துறை மேம்பாட்டிற்காக நடப்பு நிதி ஆண்டிற்கான பட்ஜெட்டில் ரூ.870 கோடி ஒதுக்கும்படி குறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சகம் மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளது.